## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் ''கம்பனி'' 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 32 பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடுசெய்ய முடியாதிருந்த போதிலும் 02 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரை தீர்த்துவைக்கப்படாத ரூபா 15,230,311 ஆன முற்பண மீதி குறைக்கப்பட்டு வியாபார கடன்பட்டோர் மீதி ரூபா 338,829,077 நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையால் கடன்பட்டோர் ரூபா 15,230,311 இனால் குறை கணிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே கடன் பட்டோரிடமிருந்து கிடைக்க வேண்டிய பெறுமதியான ரூபா 9,050,348 குறைக்கப்பட்டு வியாபாரக் கடன் கொடுத்தோர் மீதியான ரூபா 290,036,187 நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையால் கடன்கொடுத்தோர் ரூபா 9,050,348 இனால் குறைவாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | கடன்பட்டோர் மீதி கடன்பட்டோரிடமிருந்து கிடைக்க வேண்டிய மீதியில் அவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய முற்பணத் தொகை கழிக்கப்பட்டு தேறிய கடன்பட்டோர் மீதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. முற்பணத் தொகையில் ரூபா 345 மில்லியன் இலங்கை இராணுவத்திலிருந்து கிடைத்த முற்பண பெறுவனவாக இருந்ததுடன் அவர்களிடமிருந்து கிடைத்த கட்டளையின் அடிப்படையில் அதற்காக விற்பனைகள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே லங்கா சதோச நிறுவனத்திலிருந்து ரூபா 14 மில்லியன் முற்பணம் கிடைத்திருந்ததுடன் அதற்காக விற்பனை மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கடன் பட்டோரிடமிருந்து கிடைக்க வேண்டிய முற்பணத் தொகை தனியாக கணக்குகளில் காணப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கடன் கொடுத்தோர் தொடர்பாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடுசெய்யப்பட்டு காண்பிக்கப்படாதிருந்ததுடன் கடன்பட்டோர் பேரேட்டில் கடன்கொடுத்தோருக்கு செலுத்து வேண்டிய தொகை இருப்பு கொள்வனவு செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது செலவாகக் காண்பிக்கப்படுவதுடன் அந்த கடன் தொகை கடன் கொடுத்தோருக்கு செலுத்துகின்ற சந்தர்ப்பத்தின் போது செலவாக சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் இருப்பு பெறுமதியிடும் போது கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதியில் குறைந்த பெறுமதி அப்படையாகக் கொள்ளப்படவேண்டி இருந்த போதும் ரூபா 1,467,189,374 ஆன இருப்பினை பெறுமதியிடும் | வியாபார இருப்புக்களின் தேறிய தேறக்கூடிய பெறுமதியை கணிப்பிடுதல் நடைமுறையில் வசதியீனமாக இருந்ததுடன் ஒரு ஆண்டிற்குப் பிற்பட்ட இருப்புக்களுக்காக 5 சதவீத இழப்பீட்டு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போது கிரயம் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்ததுடன் தேறிய தேறக்கூடிய பெறுமதி இருப்புக் கணிப்பீடும் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம் பொருன்மையான முன்னைய காலப் பகுதியில் தவறுகளை பிற்போட்ட ரீதியில் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் சரிசெய்ய வேண்டியிருந்ததுடன் தவறு ஏற்பட்ட முன்னைய காலப் பகுதிக்காக ஒப்பீட்டு ரீதியில் மீண்டும் தயாரிக்கப்பட்ட பெறுமதியைக் காண்பித்தல் வேண்டும். எனினும் நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் தவறுகள் சரிசெய்தல் தொடர்பாக தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். எனினும் கம்பனியால் நியமத்திற்கு முரணாக மட்டக்களப்பு ரஜவாச செயற்திட்டத்திற்காக 2021/2022 நிதியாண்டின் போது கிடைக்கப்பெற்ற அரச மானிய பெறுமதியான ரூபா 22,924,908 சரிசெய்யும் போது மீளாய்வாண்டின் அரச மானிய பெறுவனவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இதன் பின்னர் உங்களின் அவதானிப்புக்கள் மற்றும் முன்மொழிவுகளை பின்பற்றி இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் உரிய கணக்கீட்டு கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் 03 வருடங்களுக்கு அல்லது 05 வருடங்களுக்கு ஒரு தடவை மீள்மதிப்பீடு செய்யவேண்டியிருந்த போதிலும் | சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் 2023/2024 ஆண்டின் போது கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களை நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக 2022/2023 ஆம் ஆண்டில் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் மார்ச் 31 இல் உள்ளவாறு கிரயம் ரூபா 226,240,000 ஆன காணிகளும், ரூபா 76,650,751 ஆன தளபாட உபகரணங்கள், ரூபா 53,311,892 ஆன கணனி, ரூபா 4,604,753 ஆன பொருத்திகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் ரூபா 46,498,023 ஆன அலுவலக உபகரணங்கள் என்பன 2012 ஆம் ஆண்டின் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்குக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 2.2.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பபிரகாரம் சொத்தொன்றின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் ஆகக் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியின் போதும் மீளாய்வு செய்யப்பட வேண்டி இருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட தரத்தில் மேற்கூறப்பட்ட மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அந்த மாற்றங்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீட்டு வேறுபாடாக கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு முழுமையான பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட ரூபா 125,382,242 ஆன சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தால் சொத்துக்கள் கணக்கீடு செய்யும் போது அதற்காக ஏற்பட்ட மொத்தக் கிரயம் மற்றும் செலவினங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் கிரயம் ரூபா 125,382,242 ஆன கட்டிடம், தளபாட உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் - கணனி, அலுவலக உபகரணங்கள் - ஏனைய மற்றும் பொருத்திகள் மற்றும் உபகரணங்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் அந்த சொத்துக்கள் மீண்டும் பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்படுகின்றமையால் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது. 2022/2023 ஆண்டின் போது சகல சொத்துக்களும் பௌதீக மெய்மையாய்வு மேற்கொண்டு மீள்மதிப்பீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 20 இன் 28 ஆம் பிரகாரம் அரச மானிய பெறுவனவுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் தனியாக வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதும் ஆண்டின் போது கிடைத்த ரூபா 1,379,052 ஆன மூலதன மானியம் காசுப்பாய்ச்சல் | ஆண்டின் போது கிடைத்த 1,379,052 ஆன மூலதன மானியம் காசுப்பாய்ச்சல் கூற்றில் மூலதன மானிய அதிகரிப்பு குறைவின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் ஆண்டின் போது கணக்குகள் தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் 28 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்கத்தின் மானிய பெறுவனவுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றில் காண்பிக்கப்படா திருந்ததுடன் 39(a) பந்தியின் பிரகாரம் அரச மானிய கணக்கிற்கு உரிய கணக்கீட்டு நியமம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | தனியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (எ) | 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு கற்பனைச் சொத்துக்கள் (கணனி மென்பொருள்) பெறுமதி ரூபா 9,330,001 தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 38 இன் பிரகாரம் கற்பனைச் சொத்துக்கள் (Intangible Assets) இனங்காணும் அடிப்படை, பயன்தரு ஆயுட்காலம், பயன்படுத்தப்படுகின்ற பெறுமானத் தேய்வு விகிதம் போன்ற தகவல்களை உள்ளடக்கி கணக்கீட்டு கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | இந்த சொத்துக்கள் 2022/2023 ஆம் ஆண்டின் இறுதியின் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அப் பெறுமதி கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் 2023/2024 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களில் உரிய தகவல்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 07 (SLFRS 07) இன் பிரகாரம் பொறுப்புக்களுக்காக பிணை வைக்க வேண்டிய சொத்துக்கள் (assets pledged as collateral) நிதிக் கூற்றுக்களில் வெளிப் படுத்த வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் வங்கி வசதிகள் (Banking Facility) பெற்றுக்கொள்வதற்காக பிணைக்கு வைக்கப்பட்ட மக்கள் வங்கியின் ரூபா 1,008,700,000 ஆன நிலையான வைப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | உங்களின் அவதானிப்புக்கள் மற்றும் முன்மொழிவுகள் தொடர்பாக கவனம் செலுத்தி எதிர்காலத்தில் இதன் பின்னர் உரிய வெளிப்படுத்தல்களை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 42,167,379 ஆன இருப்புக் குறைப்பு மற்றும் ரூபா 9,689,479 ஆன இருப்பு குறைவுகள் கணக்குகளில் தனித்தனியாக வெளிப்படுத்தப்படாமல் விற்பனைக் கிரயத்திற்கு காண்பிக்கப்பட்டிருந்தது. நீண்டகாலமாக இடம்பெறுகின்ற இந்த இருப்பு இழப்புக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 262 சதவீதத்தினால் உயர் வடைந்திருந்தது. | கம்பனியால் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற வருடாந்த இருப்பு மெய்மையாய்வின் போது இருப்பு மிகையுடன் உள்ள விடயங்கள் மற்றும் இருப்பு பற்றாக்குறை விடயங்கள் தனித்தனியாக இனங்காணப்படுகின்றது. இது தொடர்பாக உரிய பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விளக்கமளித்தலை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுத்தல். சரிசெய்யப்பட்டுள்ளதுடன் அறவிடுவதற்குள்ள பெறுமதி இருப்பு கட்டுப்பாட்டு கொள்கையின் பிரகாரம் அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | இருப்பு குறைவு மற்றும் மிகையை சரியாக கணக்குகளில் காண்பித்தல் வேண்டும். |
| (ஆ) | கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி கணக்கீடு செய்யும் போது நிறுத்திவைத்தல் வரி குறைக்கப்பட்ட பின்னர் பெறுமதி கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் மக்கள் வங்கியிலும், இலங்கை வங்கியிலும் நிலையான வைப்புக்களில் நிறுத்தி வைத்தல் வரி குறைப்பதற்கு முன்னரான வட்டி வருமானமான முறையே ரூபா 174,159,655 மற்றும் ரூபா 35,961,370 பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டியாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதனால் பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 10,506,051 இனால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்ததுடன் பெற வேண்டிய நிறுத்திவைத்தல் வரி ரூபா 10,506,051 இனால் குறைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | கணக்காண்டிற்குரிய பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் பெறவேண்டிய வட்டி வருமான கணக்கீன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிலையான வைப்பு முதிர்ச்சியடைந்த பின்னர் நிறுத்தி வைத்தல் வரியுடன் விநியோகிக்கப்படுவதுடன் அந்த சந்தர்ப்பத்தின் போது குறித்த நிறுத்தி வைத்தல் வரிக்காக ஏற்படுகின்ற குறிப்பிட்ட வட்டித் தொகை இனங்காணப்படுகின்றது. குறித்த வட்டித் தொகையை இனங்கண்டதன் பின்னர் பெற வேண்டிய வட்டி வருமானக் கணக்கில் நிறுத்திவைத்தல் வட்டி வருமானக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. | கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி பெறுமதி ரூபா 2,909,027 ஆக இருந்ததுடன் பெறுமதி சேர் வரி அனுப்பல் பத்திரத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக ரூபா 12,486,683 தொகை 2023 ஏப்ரல் 20 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது. அதனால் நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாமல் மீளாய்வாண்டிற்காக செலுத்தப்பட்டதன் காரணமாக நிதிக் கூற்றுக்களில் வரிச் செலவினம் மற்றும் செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி பெறுமதி ரூபா 9,577,656 இனால் குறைவாகக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 மார்ச் மாதத்திற்காக பெறுமதிசேர் வரி அறிக்கையின் படி ரூபா 12,486,683 தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான பகுப்பாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் ஏதாவது தொகையொன்று மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்படுமாயின் எதிர்காலத்தில் பெறுதி சேர் வரி செலுத்தும் போது அந்த வேறுபாடைக் குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரிக்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மட்டக்களப்பு கண்காட்சிக் கூடத்திற்காக மீளாய்வாண்டிற்குரியதாக செலுத்த வேண்டிய வாடகைப் பெறுமதி ரூபா 87,500 ஆக இருந்த போதிலும் கம்பனியால் 2022 செப்டெம்பர் 01 ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் 31 வரையான காலப் பகுதிக்காக மொத்த வாடகைக் பெறுமதி ரூபா 300,000 முற்பணக் கணக்கு வரவு வரவாகவும் அட்டுறு வாடகைக் கணக்கு செலவாகவும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிதிக் கூற்றுக்களில் முற்பணப் பெறுமதி ரூபா 300,000 இனாலும், அட்டுறு வாடகை ரூபா 212,500 இனாலும் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்ததுடன் வாடகைச் செலவினம் ரூபா 87,500 இனால் குறைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | மக்களப்பு கண்காட்சி கூடத்திற்காக 2022.09.01 ஆந் திகதி முதல் 2024.08.31 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்காக செலுத்தப்பட்ட ரூபா 300,000 முற்பணத் தொகை சரியாக முற்பணக் கணக்கில் வரவு வைத்து அட்டுரு செலவினத்தில் செலவாக இறுதிக் கணக்குகளில் சரியாக காண்பிக்கப்பட்டுள்ளது. இந்த தொகை 2023.05.08 ஆந் திகதியே செலுத்தப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் செலுத்த வேண்டிய வாடகைப் பெறுமதி சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முற்பண கழித்தல்களுக்கு முன்னர் கடன்பட்டோர் பெறுமதியான ரூபா 726,761,316 தொகையில் 2, 3, 4, 5 மற்றும் 5 இற்கு மேற்பட்ட ஆண்டு கால வீச்சில் அறவிடப்படாத கடன்பட்டோர் மீதிகளின் பெறுமதி முறையே ரூபா 29,055,601 தொகை, ரூபா 4,207,863 தொகை, ரூபா 9,215,669 தொகை, ரூபா 17,378,652 தொகை மற்றும் ரூபா 166,098,488 ஆக இருந்தது. 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதியான ரூபா 166,098,488 தொகையில் 08 வருட காலத்திலிருந்து 06 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன்பட்டோர் மீதி ரூபா 104,387,590 மீதியில் உறுதிப்படுத்தாமல் கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. | 2021/2022 கணக்காண்டில் இருந்து முற்பணத் தொகை கழிப்பதற்கு முன்னர் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதியில் 5 சதவீதம் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன்பட்டோர் பெறுமதியான ரூபா 104,387,590 இற்காக முழுமையாக கடன்பட்டோருக்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஏனைய பெற வேண்டிய பெறுமதி ரூபா 425,033,261 தொகையில் உள்ளடக்கப்பட்ட 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிடப்படாத பெற வேண்டிய மீதி ரூபா 15,180,560 ஆகும். | எதிர்காலத்தில் மீதிகளை உறுதிப்படுத்தி தேவையான தீர்த்து வைத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடன் கொடுத்தோர் மீதியான ரூபா 290,036,187 தொகையில் முறையே 04 மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட கால வீச்சிலிருந்து தீர்த்து வைக்கப்படாத கடன் மீதிகளின் பெறுமதி முறையே ரூபா 39,056,445 மற்றும் ரூபா 51,465,657 ஆகும். மேலும் நீண்ட காலமாக தீர்த்து வைக்கப்படாத செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா 205,743,565 இனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு கடன்கொடுத்தோர் கணக்குகளில் எடுக்கப்பட்ட வியாபார மீதி 2023.03.31 இல் உள்ளவாறு ரூபா 290,036,186.78 ஆக இருந்ததுடன் மேலதிகமாக கடன்கொடுத்தோர் தொடர்பான காலப் பகுப்பாய்வு அறிக்கையில் ஒவ்வொரு கடன்கொடுத்தோரினதும் கொடுக்கல் வாங்கல்களில் அந்தந்த காலப் பகுதிக்குரிய கொள்வனவுகள் | கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(கடன்கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய கடன்+) ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. கடன்கொடுத்தோர் கொடுப்பனவுகள் மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் அந் திகதியில் கொடுப்பனவுகள் (-) பெறுமதியாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. காலப் பகுப்பாய்வு அறிக்கையில் 2023.03.31 இல் உள்ளவாறு தேறிய பெறுமதியாக (கொள்வனவு மற்றும் மீளச் செலுத்துதல் குறைக்கப்பட்ட பின் பெறுமதி) ஆக ரூபா 290,036,186.78 காண்பிக்கப்பட்டுள்ளது.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2015 மே 25 ஆம் திகதிய PED 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றிற்கை | உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக உரித்தின்றிய நிலையான அடிப்படையில் சேர்க்கப்பட்ட 41 உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தப் போக்குவரத்துப் படியாக ரூபா 2,952,500 தொகையும், ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட 10 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,160,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | அந்த உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்துப் படி செலுத்துவதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் அதற்காக திறைசேரி அங்கீகாரத்தையும் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 735,435,943 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 472,717,911 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 262,718,032 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு வருமானம் ரூபா 666,533,283 இனால் அதிகரித்தமையும், நிதிச் செலவினம் ரூபா 36,074,849 இனால் குறைவடைந்தமையும் பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியால் 2015 ஆம் ஆண்டின் போது நெல் இருப்பை சேகரிப்பதற்காக நடாடும் களஞ்சியம் (Cocoon) 50 கிரயம் ரூபா 107,388,160 தொகையில் பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன் அந்த இருப்பில் 15 அலகுகள் மாத்திரம் நெல் சந்தைப்படுத்தல் சபைக்ககு ரூபா 35,432,450 தொகையில் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் 13 அலகுகள் CSR செயற்திட்டத்தின் கீழ் 04 அரச நிறுவனவங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. மிகுதி இருப்பின் கிரயம் ரூபா 47,250,790 ஆன 22 அலகுகள் 08 வருடங்களில் இருந்து விற்பனை செய்யப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | Cocoon தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் பின்பற்றப் படுவதுடன் எஞ்சியுள்ள Cocoon, CSR செயற்திட்டத்தின் மூலம் அகற்றுவதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தில் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தின் முகாமைத்துவ முறையை நவீனமயப்படுத்துவதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்று ரூபா 1,805,000 முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த முற்பணம் வழங்கப்பட்டு 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் கணக்கீட்டு முறைமையின் நவீனமயப்படுத்துவதற்கோ அல்லது முற்பணத்தைத் தீர்த்து வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணத் தொகை முறைமையின் அபிவிருத்தி செய்வதற்கான கண்காட்சி கூடத்திற்காக Loyalty Card Process அமுல்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. அதனால் எதிர்காலத்தின் போது Customer Loyalty Program இற்கான Invoice பெறுமதி ரூபா 1,805,000.00 தொகை முற்பணத் தொகையில் ஈடுசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு முறைமையின் நவீனமயப்படுத்துதல் அல்லது முற்பணத்தைத் தீர்த்து வைத்தல் வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் கடன்பட்டோருக்கான இழப்பீட்டு நட்டம் ரூபா 1,211,418 முதல் ரூபா 105,281,937 வரை ரூபா 104.070,519 அதாவது 99 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது. | கடன்பட்டோருக்காக ரூபா 104,387,590 இழப்பீட்டு ஒதுக்கமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கடன்பட்டோருக்கான இழப்பீட்டு நட்டத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு களஞ்சியத்தில் காணப்படுகின்ற கிரயம் ரூபா 529,846,414 ஆன இருப்புக்களில் உள்ளடக்கப்பட்ட 1, 2, 3, 4 மற்றும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் களஞ்சியத்தில் காணப்படுகின்ற இருப்புக்களின் பெறுமதி முறையே ரூபா 39,190,210 தொகை, ரூபா 7,251,928 தொகை, ரூபா 3,722,072 தொகை, ரூபா 6,035,062 மற்றும் ரூபா 89,113,082 ஆகக் காணப்பட்டது. மேற்கூறப்பட்ட இருப்பில் உள்ளடக்கப்பட்ட பழுதடைந்த விடயங்களாக இனங்காணப்பட்ட ரூபா 9,511,044 ஆன இருப்பினை அகற்றுதல் தொடர்பாக கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் காலாவதியான அல்லது கலாவதியாகுவதற்கு அண்மித்த இருப்புக்களை மெய்மை ஆய்வு செய்வதற்கு போதியளவான திட்டமுறைமை அல்லது கணக்கீட்டு மென்பொருள் முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்க வில்லை. | 2023.09.11 ஆம் திகதி வரையில் இருப்பின் கிரயம் ரூபா 425,510,165.25 ஆக இருந்ததுடன் 1 வருடத்திற்கு மேற்பட்ட இருப்பின் கிரயம் ரூபா 72,228,714 வரை குறைப்பதற்கு முடியுமாக இருந்தது. பழுதடைந்த மற்றும் மெதுவாக விற்பனை செய்யப்படுகின்ற பொருள் இருப்புக்களை அகற்றுவதற்காக நிருவனம் அநேக நடவடிக்கைகள் எடுத்திருந்தது. நிறுவனத்தில் காணப்படுகின்ற மென்பொருள் முறைமை மூலம் இருப்பு காலாவதியாகிய மற்றும் காலாவதியாகுவதற்கு அண்மித்தவைகளை இனங் காண்பதற்கு நடைமுறையில் வசதிகள் காணப்படவில்லை. பழுதடைந்த இருப்புக்களின் கிரயம் ரூபா 1,456,928 வரை குறைக்கப்பட்டுள்ளது. மெதுவாக விற்பனை செய்யப்படுகின்ற மற்றும் விற்பனை செய்யப்படாத இருப்புக்களையும் அகற்றுவதற்காக இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. | இருப்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் உரிய பிரகாரம் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் நவம்பர் முதல் 2022 மார்ச் வரை Q Shop விற்பனைக் கடைகள் 09 ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2020/2021 ஆம் ஆண்டின் போது 02 விற்பனைக் கடைகள் மற்றும் 2022/2023 ஆம் ஆண்டின் போது 09 விற்பனைக் கடைகள் செயற்படு நிலையில் காணப்பட்டது. அந்த விற்பனைக் கடைகளில் 2020/2021 மற்றும் 2021/2022 ஆம் ஆண்டுகளில் மொத்த செயற்படு இலாபம் முறையே ரூபா 1,335,844 மற்றும் ரூபா 2,163,144 ஆக இருந்ததுடன் 2022/2023 ஆம் ஆண்டின் மொத்த செயற்படு நட்டம் ரூபா 10,043,972 ஆகும். அதன் காரணமாக Q Shop விற்பனைக் கடைகளை ஆரம்பித்ததன் மூலம் கம்பனியில் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. மேலும் Q Shop விற்பனைக் கடைகளில் இனங்காணப்பட்ட பெறுமதி ரூபா 6,209,741 ஆன (விற்பனை விலையில்) காலாவதியாகிய மற்றும் பழுதடைந்த பொருட்கள் நாரஹேன்பிட்ட களஞ்சியத்தில் காணப்படுகின்றமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் அந்த பொருட்களை களஞ்சியத்திலிருந்து அகற்றுவதற்காக முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | Q Shop 08 விற்பனைக் கடைகள் அதாவது நவம் மாவத்தை, ஹோமாகம, பாதுக்கை, கோட்டை, மத்தேகொட, தலங்கம மற்றும் பொரளை விற்பனை கடைகளில் வாசனைத் திரவியங்கள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகளை விற்பனை சபைக்கு வழங்குவதற்கு 2023.05.26 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது.<br>மாகொம்பர மற்றும் கெஸ்வாவ விற்பனைக் கடைகள் வாடகைக்கு வழங்குவதற்காக 2023.07.14 ஆம் திகதிய கடிதம் மூலம் இணக்கம் காணப்பட்டது.<br>நாரேஹேன்பிட்ட Q Shop கட்டடத்தை வாடகைக்கு வழங்குவதற்காக சரசவி கம்பனியுடன் 2023.04.11 ஆந் திகதி உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்ககை எடுக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திலிருந்து எதர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | Q Shop விற்பனைக் கடைகள் தொடர்ச்சியாக நட்டம் பெறுவதன் காரணமாக 2023 ஆம் ஆண்டின் விற்பனைக் கடைகளின் செயல் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட் டிருந்ததுடன் 2023 மார்ச் 28 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் 08 விற்பனைக் கடைகள் 05 வருட கால எல்லையில் மாதாந்தம் ரூபா 575,000 வாடகைத் தொகையில் வாசனைத்திரவியங்கள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகளை விற்பனைச் சபைக்கு வழங்குவதற்கு 2023 மே 26 ஆம் திகதி உடன்படிக்கை | வாசனைத் திரவியங்கள் மற்றும் அது சார்ந்த உற்பத்தி விற்பனை சபையுடன் உடன்படிக்கை செய்திருந்த போதிலும் அவர்களினால் ஒவ்வொரு கட்டடத்திலும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.<br>அந்த பழுது பார்த்தல்களின் பின்னர் தற்போது ஹோமாகம, பொரளை, பாதுக்கை, மன்றம், கோட்டை மற்றும் நவம் மாவத்தை விற்பனைக் கடைகளில் வாசனைத் திரவியங்கள் மற்றும் அது | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த போதிலும் 2023 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் 04 விற்பனைக் கடைகள் மாத்திரம் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | சார்ந்த உற்பத்தி விற்பனைச் சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. கெஸ்பாவ, மாகும்புர, மத்தேகொட, தலங்கம கட்டிடங்கள் பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் எதிர்வரும் மாதகாலத்திற்குள் அந்த கட்டிடங்களில் வாசனைத் திரவியங்கள் மற்றும் அது சார்ந்த உற்பத்தி விற்பனைச் சபைக்கு கையளித்தல் பூர்த்தி செய்ய முடியும். | |
| (ஈ) | அமப/20/1698/313/029 ஆம் இலக்க மற்றும் 2020 நவம்பர் 16 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியால் ஆரம்பிக்கப்பட்ட கஜவாச சந்தைத் தொகுதியின் ஆரம்ப தினமான 2021 மார்ச் 15 முதல் கணக்காய்வுத் திகதியான 2023 யூன் 30 ஆம் திகதி வரை கிடைத்த தேறிய நட்டம் ரூபா 6,743,948 ஆகும். இந்த காலப் பகுதிக்குரிய மொத்த வாடகை வருமானம் ரூபா 31,222,146 ஆக இருந்ததுடன் காசாக கிடைப்பனவு மற்றும் அவ் வாடகை வைப்புக்களில் தீர்த்து வைத்ததன் பின்னர் 2023 யூலை 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய பெறுமதி ரூபா 1,369,750 ஆகும். மேலும் வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் மாதந்த மின்சாரப் பட்டியல், நீர் கட்டணப் பட்டியல் மற்றும் தெலைபேசி பட்டியல்கள் இரண்டாம் தரப்பினரால் செய்ய வேண்டிய இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட காலப் பகுதிப்பகுதிக்குரிய மின்சார செலவினமான ரூபா 12,947,529 தொகை கம்பனியால் செலவிடப்பட்டிருந்தது. | கொவிட் தொற்று நோய் நிலைமையினால் 2021 ஏப்ரல் மாதத்தில் இருந்து கடைத் தொகுதிகள் மூடப்பட்டிருந்தது. ரஜவாச சந்தைத் தொகுதி மூடப்பட்ட போதிலும் மின்சாரப் பட்டியல், நீர்ப் பட்டியல் STC நிறுவனத்தால் செலவிடப்பட்டிருந்ததுடன் கடை உரிமையாளர்களின் கோரிக்கையின் அடிப்படையில் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் ஆரம்ப மாதமான பெப்ரவரி, மே, யூன் மாதங்களில் வாடகைப் பணம் பெற்றுக் கொள்ளல் கடை உரிமையாளர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.<br><br>2022 செப்டெம்பர் மாதத்தில் இருந்து நிறுவனத்தால் வாடகைப் பணம் நிதிப் பிரமாணம் செலுத்தாக கடை உரிமையாளர்களின் இலக்கம் 07 மற்றும் 08 கடையிலிருந்து விலகிச் சென்றிருந்தனர். ஒவ்வொரு கடைகளுக்காகவும் நீர் கட்டணப் பட்டியலுக்காக மீற்றர்மாணி பொருத்துதல் நடைமுறையில் முடியாதிருந்ததுடன் அந்தக் கடை உரிமையாளர்கள் மலசல கூடங்களை மாத்திரம் | செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பயன்படுத்துகின்றனர். அதனால் மேற்கூறப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு 2022.04.01 முதல் வருகின்ற நிதி ஆண்டில் ரஜவாச கட்டிடத்தை இலாபத் தன்மையுள்ள பிரிவாக நடாத்திச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் உணவு ஆணையாளர் திணைக்களத்தில் இருந்து வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த வெயாங்கொட களஞ்சியத்தின் உடன்படிக்கை காலப்பகுதி 2023 பெப்ரவரி மாதம் முடிவடைந்ததன் பின்னர் 06 மாத காலத்தில் பொருட்களை களஞ்சியத்தில் வைக்காமல் விளைவற்று பேணிச்சென்ற போதிலும் உடன்படிக்கை புதுப்பிப்பதற்கோ அல்லது களஞ்சியத்தை மீளக் கையேற்பதற்கான நடவடிக்கைகளோ எடுக்காமையின் காரணமாக மாதாந்த வாடகை ரூபா 210,000 வீதம் 06 மாதங்களுக்காக ரூபா 1,260,000 உணவு திணைக்களத்திற்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | நிறுவனத்தால் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வெயாங்கொட களஞ்சியம் எதிர்வரும் 01 வருடத்திற்காக நீடிக்கப்பட்டுள்ளது. | வாடகை அடிப்படையில் பெறப்பட்ட களஞ்சியம் விளைவற்ற வகையில் பேணிச் செல்லாதிருத்தல் வேண்டும். |

**3.5 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2006 இன் அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் சகல கொள்வனவுகளுக்காகவும் பிரதான பெறுகை திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் சந்தை வியாபார இருப்புக்களுக்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் தொடர்பாக மாத்திரம் பெறுகைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் போது காலரீதியான தேவைகளுக்காக மற்றும் நாளாந்த நுகர்வுத் தேவைகளுக்காகவும் தனித்தனியாக பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதன் போது நாளாந்த பெறுகைத் தேவைகள் அந்தந்த சந்தர்ப்பங்களின் போது திட்டங்களின் | சகல கொள்வனவுகளுக்காகவும் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பிரகாரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2023 சனவரி 11 ஆந் திகதிய இலக்கம் 23/0038/627/001 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் உள்நாட்டு சந்தைகளில் காணப்படுகின்ற முட்டை பற்றாக்குறைக்கு குறுகிய காலத் தீர்வாக முட்டைகளை இறக்குமதி செய்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 மார்ச் மாதம் முதல் மே வரை 16,531,200 முட்டைகள் இறக்குமதி செய்யும் போது முட்டை இறக்குமதி செய்யப்பட்ட பின் தற்காலிகமாக களஞ்சிய நிலையமாக பெறுகைகள் செயற்பாட்டில் அங்கீரிக்கப்பட்ட Immortal கம்பனி தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த கம்பனியினால் Spectra Yard நிறுவனத்திலிருந்து சேவைகளைப் பெற்றுக் கொண்டு கம்பனிக்கு சேவை வழங்கப்பட்டிருந்தது. பின்னர் கம்பனியால் பெறுகை செயற்பாடுகள் பின்பற்றப்படாமல் Spectra Yard நிறுவனத்தின் மூலம் சேவை பெறப்பட்டு ரூபா 7,053,250 களஞ்சிய வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது. | இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை விடுவித்தல், வைத்துக் கொள்ளல் (Laden Storage) மற்றும் போக்குவரத்திற்காக எங்களால் கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் முட்டை போன்ற பொருட்களை வைத்துக் கொள்ளல் மற்றும் அதன் பொறுப்புக்களை ஏற்றல் மற்றும் போக்குவரத்துச் செய்வதற்காக வழங்குனர்கள் விருப்பம் தெரிவிக்காமையின் அடிப்படையில் ஒரு சேவை வழங்குநர் மாத்திரம் அந்தக் கேள்விக்கு முன் வந்திருந்ததுடன் எங்களால் மேற்கூறப்பட்ட கேள்வி மூலம் தெரிவு செய்யப்பட்ட Immortal கம்பனி மூலம் Spectra Yard சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த து. எனினும் பின்னர் எமது நிறுவனத்தின் மூலம் நேரடியாக Spectra Yard சேவை பெற்றுக் கொள்வதன் மூலம் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான வசதியாக இருந்தமையால் 2023.08.01 முதல் Spectra Yard நிறுவனத்தின் மூலம் நேரடியாக கேள்வியில் குறிப்பிடப்பட்ட விலைகளில் குறைந்த விலையின் கீழ் அந்த சேவை பெறப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.6 மனிவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனியின் மொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 320 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 328 ஆனமையால் அத்திகதியில் 45 வெற்றிடங்கள் மற்றும் 53 மிகை காணப்பட்டன. இந்த 45 வெற்றிடமான பதவிகளில் உள்ளடங்கியுள்ள நிறைவேற்று நிலையில் 24 வெற்றிடங்கள் மற்றும் உதவி பதவியணி யினகளில் 21 வெற்றிடங்களும் காணப்பட்டது மேலும் உள்ளபடியான பதவியணியினரில் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட 51 உத்தியோகத்தர்கள் மற்றும் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்ததன் பின்னர் மீண்டும் கால நீடிப்பு இன்றி அமய அடிப்படையில் சேர்க்கப்பட்ட 44 உத்தியோகத்தர்களும் காணப்பட்டனர். | நிறுவனத்தின் விற்பனை நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதன் புதிய செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் அந்த நடவடிக்கைகளை மிகவும் வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கான முன்னால் இருந்த பதவியணியினரின் எண்ணிக்கை போதியளவில் இல்லாமையினால் ஒப்பந்த மற்றும் அமய அடிப்படையில் ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். அதற்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.<br>வர்த்தக அமைச்சின் செயலாளர் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு இந்த ஒப்பந்த மற்றும் அமய ஊழியர்களின் தேவைகள் விலக்கப்பட்டு அந்த ஊழியர்களுக்காக ஒப்பந்த அடிப்படையில் புதிய ஊழியர் திட்டமொன்று அங்கீகரித்துத் தருமாறு பொது முகாமையாளரின் கையொப்பத்துடன் 2023.02.15 ஆம் திகதி கடிதம் அனுப்பப்பட்டிருந்தது.<br>மேற்கூறப்பட்ட விடயங்களின் காரணமாக ஒப்பந்த மற்றும் அமய சேவைக்காலம் முடிவடைமந்த பின்னர் அந்த காலத்தைக் நீடிக்கும் நியமனக் கடிதம் வழங்கப்படாதிருந்ததுடன் தலைவரின் அங்கீகாரத்தின் கீழ் அவர்களுக்கு சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு இணங்கக்கூடிய வகையில் இருக்க வேண்டியிருந்ததுடன் ஒப்பந்த மற்றும் அமய அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் களுக்காக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்
### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022/2023 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் 11 செயற்பாடுகள் இனங்காணப்பட்டிருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின்படி 05 செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. மொத்த செயற்திட்டங்களுடன் ஒப்பிடும் போது நிறைவேற்றப்பாத செயற்திட்டங்களின் எண்ணிக்கை 45 சதவீதமாக இருந்ததுடன் அந்த செயற் திட்டங்களுக்கிடையே விசேஷட முக்கியத்துவம் வாய்ந்த ERP செயற்திட்டம் மற்றும் ஏற்றுமதி சந்தைக்கான நடவடிக்கைகளும் உள்ளடங்கி இருந்தது. | நிறுவனத்திற்கு ஆண்டின் ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களுக்குப் புறப்பாக அரசாங்கத்தின் தேவையின் அடிப்படையில் அநேகமான செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததுடன் அதன் மூலம் தேவையான நிதி ரீதியான இலக்கு அடையப்பட்டுள்ளது. அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது நிறுவனம் அந்த விஷேட செயற்திட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தி இருந்ததுடன் ஆண்டின் ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் யாவும் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. எனினும் எதிர்காலத்தில் வருட ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்திற்கு இணங்க செயற்படுவதற்கு முயற்சி எடுக்கப்படும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் விற்பனை மேம்படுத்தலை நோக்காகக் கொண்டு பல்வேறு விற்பனை / உற்பத்தி வழிகள் (New Product Line) 08 ஆண்டில் அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அவ்வாறான விற்பனை / உற்பத்தி வழிகள் 03 மாத்திரம் அறிமுகப்படுத்தப் பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் நிறுவனம் புதிதாக விற்பனை / உற்பத்தி வழிகள் 03 மாத்திரமே அறிமுகப்படுத்தி இருந்தது. எதிர்வரும் ஆண்டுகளில் திட்டங்களைத் தயாரிக்கும் போது உள்ளபடியான நிலைமைக்கு அண்ணளவான திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022/2023 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் வெளிப் படுத்தப்பட வேண்டிய மேவுகை செய்யக்கூடிய கணக்காய்வு துறைகள் 06 இனங்காணப்பட்டிருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் இருப்பு மெய்மையாய்வு துறைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் ஏனைய துறைகளில் போதியளவாக மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை.<br>மேலும் இந்த இருப்பு மெய்மை அய்வின் போது தொடர்ச்சியாக ஏற்படுகின்ற இருப்பு இழப்பீட்டு நிலைமையைக் குறைப்பதற்காக நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022/2023 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் மேவுகை செய்யப்படக்கூடிய கணக்காய்வு விடயங்கள் 06 இல் 74 சதவீதம் அளவிலான கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2023/24 ஆம் ஆண்டின் போது கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் இனங்காணப்பட்ட கணக்காய்வுத் துறைகளை மேவுகை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |